பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 11 செவ்வாய்க்கிழமை (27-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 266

# சோவியத் யூனியன் பிரிந்து பத்து புதிய நாடுகள் உதயம்!

## விலகிச் செல்லும் குடியரசுகளுக்கு உலக நாடுகள் பல அங்கீகாரம்

லண்டன் ஆகஸ்ட் 27

சோவியத் யூனியனில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளை அடுத்து அதன் மாநிலக் குடியரசுகள் பல யூனியனிலிருந்து பிரிந்து புதிய நாடுகளை உருவாக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

சோவியத் யூனியன் பல துண்டுகளாகப் பிரிவது தவிர்க்க முடியாதது என்று சர்வதேச அரசியல் நிபுணர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

யூனியனிலிருந்து பிரிந்து செல்லும் குடியரசுகளை சுதந்திர நாடுகளாக ஏற்றுக்கொண்டு அங்கீகாரம வழங்க உலக நாடுகள் பல போட்டி போட்டுக்கொண்டு முன்வந்திருக்கின்றன.

சோவியத் யூனியனின் 15 மாநிலக் குடியரசுகளில் எட்டு குடியரசுகள் ஏற்கனவே, சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து செல்வதற்கான முன் அறிவிப்புகளை விடுத்திருக்கின்றன.

போல்டிக் குடியரசுகளான லித்துவேனியா, லத்வியா, எஸ்தோனியா ஆகியவையும் மற்றும் உக்ரெய்ன், மொல்டேவியா, பைலோரஷ்யா, உஸ்பெகிஸ்தான், ஆர்மேனியா ஆகியவையே அக் குடியரசுகளாகும்.

இவை பிரிந்து செல்ல, மிகப்பெரிய மாநிலக் குடியரசான ரஷ்யக் குடியரசின் கீழ் எஞ்சிய மாநிலங்கள் ஒரு நாடாக உருவெடுக்கும் என

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பிரிய விரும்பும் குடியரசுகள் பிரிந்து செல்லலாம்!

### கோர்பச்சேவ் அறிவிப்பு

சோவியத் யூனியனின் கீழ் ஒன்றுபட்டிருக்க விரும்பும் குடியரசுகள் புதிய ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடலாம். பிரிய விரும்பும் குடியரசுகள் தமது விருப்பப்படி செயல்பட சுதந்திரம் வழங்கப்படும்.

—இவ்வாறு சோவியத் நாடாளுமன்றமான சுப்ரீம் சோவியத்தின் அவசரக் கூட்டத்தில், நேற்று உரையாற்றியபோது ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவ் தெரிவித்தார்.

புதிய ஒருங்கிணைப்பு ஒப்பந்தம் கைச்சாத்தானதும் மாநிலக் குடியரசுகளுடன் இதுபற்றிய பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

(உ-த-3)

## கொழும்பில் குண்டுப் பீதி!

லண்டன், ஆக. 27

குண்டுத் தாக்குதல்கள் இடம் பெறலாம் என்ற அச்சத்தினால் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

வெடிகுண்டுகள் தயாராக இருக்கலாம் என்று சந்தேகத்தில் முக்கிய பாதைகள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், வாகனங்கள் கடுமையாகச் சோதனையிடப்படுவதாகவும் அச் செய்திகள் தெரிவித்தன. [உ-3]

## 15 ஆயிரம் விவசாயிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஆக. 27

யாழ். மாவட்டத்தில் சிறு தானிய உற்பத்தியில் ஈடுபடும் மேலும் 15 ஆயிரம் பேருக்கு உதவி வழங்க யு. எஸ். எயிட் நிறுவனம் முன் வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே 15 ஆயிரம் விவசாயிகளுக்கு, இந்த நிறுவனம் உதவிகள் வழங்கியது தெரிந்ததே. (உ-3)

## ஆசிரியருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

கொழும்பு, ஆக. 27

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்காக 48 கோடி 80 லட்சம் ரூபா திறைசேரியால் வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட இந்த நிதியில் இருந்து எதிர்வரும் செப்டம்பரில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

## சோவியத் ஜனாதிபதியை மக்களே தெரிவு செய்வர்!

மொஸ்கோ, ஆக. 27

சோவியத் யூனியனில் உள்ள குடியரசுகளுக்கிடையிலான புதிய ஒருங்கிணைப்பு ஒப்பந்தம், கைச்சாத்தான பின்னர் ஜனாதிபதியை மக்கள் நேரடியாகத் தெரிவுசெய்யும் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் அறிவித்திருக்கிறார்.

சோவியத் நாடாளுமன்றத்தின் சுப்ரீம் சோவியத் அமைப்பின் அவசரக் கூட்டத்தில் பேசுகையிலேயே ஜனாதிபதி கோர்பச்சேவ் இதனை வெளியிட்டார்.

நாட்டில் உள்ள உயர் பதவிகள், அமைப்புக்கள் அனைத்துக்கும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்ட அரசியல், பொரு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாறிலும் நேற்று குண்டு வீச்சுத் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஆக. 27

மணலாறு காட்டுப் பகுதிகளில் நேற்றுக் காலை 6 மணி முதல் மூன்று பொம்மர்கள், அவ்ரோ விமானம் ஒன்று ஆகியவை இருபதிற்கும் அதிகமான குண்டுகளை வீசின.

கொக்கிளாய்ப் பகுதி குடியிருப்புகள் மீது நேற்றுக் காலை 10 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

இத்தாக்குதல்களினால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை.

இதேசமயம் —

மணலாறு பகுதியில் தங்கியுள்ள தமிழ் மக்களை இராணுவத்தினர் சுற்றி வளைத்து கைது செய்து தாக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ-த]

## ஷெல் விபத்து: மற்றும் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 27

வட்டுக்கோட்டை நல்லமாவடி என்ற இடத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஷெல் விபத்துச் சம்பவத்தில் காயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சுவாமிநாதன் துஷ்யந்தன் [வயது 9] என்ற சிறுவன் நேற்று மரணமானான்.

ஷெல்லைச் சூடாக்கிய போது அது வெடித்ததினால் ஏற்பட்ட இந்த விபத்தில் மரணமானோர் எண்ணிக்கை இத்துடன் மூன்றாக அதிகரித்துள்ளது. [இ-28-15]

## களுவாஞ்சிக்குடியில் 20 அழுகிய சடலங்கள்

### புதைகுழியில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஆக. 27

கிழக்கு மாகாணம் - களுவாஞ்சிக் குடிப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த 20 பேரின் சடலங்கள் பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மிகவும் அழுகிய நிலையில் சடலங்கள் காணப்பட்டன என்றும் சிலவற்றில் பொலீஸாரின் சீருடைகள் இருந்தன என்றும் அறிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் பொலீஸாரின் சடலங்களாக அவை இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

## பொன்னாலையில் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், ஆக. 27

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து ஞாயிறு இரவு மூளாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொன்னாலைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் ஒரு வீடு சேதம் அடைந்தது.

(இ-28-15)

## ஓமந்தை தடை முகாமில் பொதுமகன் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 27

ஓமந்தை பயணிகள் சோதனை நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த அசம்பாவிதம் ஒன்றில் பொதுமகன் ஒருவர் இறந்ததாக அறியவருகிறது. இது தொடர்பாக இரண்டு பேரை விடுதலைப் புலிகள் கைது செய்திருக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட பொது மகனுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அங்கத்தவர் ஒருவருக்கும் இடையில் ஆரம்பித்த வாய்த் தர்க்கம், தகராறாக மாறியதாகவும்—

தகராற்றின் உச்சக்கட்டத்தில் விடுதலைப் புலிகள் அங்கத்தவர் பொதுமகனைக் கடுமையாகத் தாக்கியதாகவும்—

அவ்வேளை அந்தப் பொது

[3 ஆம் பக்கம் பார்க்க]

## இருவர் கைது

சென்னை, ஆக. 27

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கள் என்று கூறப்படும் இரண்டு பேரை பொலீஸார் கரூர் அருகே செட்டிபாளையம் மலைப் பகுதியில் வைத்துக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சுண்டுக்குளியில் குண்டு வீச்சு! பெண் தலை சிதறி மரணம்!!

### ஐவர் காயம்; வீடுகள் - வாகனங்கள் சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 27

சுண்டுக்குளிப் பகுதியில், சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக நேற்றுப் பகல் பதினொரு மணியளவில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் பெண் ஒருவர் தலை சிதறி மரணமானார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐவர் காயம் அடைந்தனர். சில வீடுகளும் கடை ஒன்றும் வாகனங்களும் சேதமடைந்தன.

மூன்று பொம்மர்கள் இத்தாக்குதலில் ஈடுபட்டன. ஆறு குண்டுகள் வீசப்பட்டன.

வவுனியாப் பக்கமாக இருந்து வந்த இந்த பொம்மர்கள் வட்டமிடாமலேயே முதலாவது தாக்குதலை நடத்தி இருந்தன.

ஊர்காவற்றுறைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துவந்து யாழ். நகரில் தங்கியிருந்த சின்னத்தம்பி மாரிமுத்து [வயது 65] என்ற பெண்ணே மரணமானவர் ஆவார்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். செயலக வேலைகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஆக. 27

யாழ். செயலக வேலைகள் நேற்றுப் பகல் 11 மணியுடன் ஸ்தம்பிதம் அடைந்தன.

சுண்டுக்குளிப் பகுதி குண்டு வீச்சை அடுத்து செயலக ஊழியர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்று விட்டதே இதற்குக் காரணம்.

செயலகத்துக்கு வந்த பொதுமக்கள் பலர் ஊழியர் இன்மையால் ஏமாற்றத்துடன் திரும்பியதைக் காணக்கூடியதாக இருந்தது.

[இ-143]

## பாரிஸ் விமான நிலையத்தில் ஈழத் தமிழ் அகதி மரணம்

### நாடு கடத்த முயன்றபோது!

பாரிஸ், ஆக. 27

ஈழத் தமிழ் அகதி ஒருவரை பாரிஸில் வைத்து வலுக்கட்டாயமாக விமானத்தில் ஏற்றி நாடு கடத்த முற்பட்டபோது அவர் விமான நிலையத்திலேயே மரணமானார்.

சட்ட விரோதமாக பிரான்ஸினுள் பிரவேசித்ததாகக் கூறப்படும் அருமம் சிவசம்பு ஈசன் என்பவருக்கே இக்கதி ஏற்பட்டது.

பாரிஸ் அதிகாரிகள் அவரை வலுக்கட்டாயமாக விமானத்தில் ஏற்றி நாடு கடத்த முயற்சித்தபோது, அவர் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்தார் என்று அறிவிக்கப்படுகிறது.

விமான நிலையத்தில் வைத்து அவருக்கு கடுமையான மார்பு வலி ஏற்பட்டது என்றும்—

சில நிமிடங்களில் அவருக்கு மரணம் சம்பவித்தது என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

எலுமிச்சை, மா போன்ற நாற்றுக்கள் உண்டுபண்ணக் கூடிய வெற்றுத் தகரப் பேணிகள் மற்றும் ஜாம் போத்தல்கள், ஜாம் போத்தல் மூடிகள் தேவை. தொடர்பு: சைவ வித்தியா விருத்திச் சங்கம். கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி-0390]

### தவறிவிட்டது

ஐயாத்துரை சுந்தரலிங்கம், சுந்தரலிங்கம் நாகமுத்து [நயினாதீவு] ஆகியோரின் அடையாள அட்டைகள் இரண்டு வாரங்களுக்கு முன் கேரதீவுத்துறைக்கும், நாவற்குழிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். (17898)

### சோதிடம்

திராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை, போன்ற துரதிர்ஷ்டங்கள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். அதிர்ஷ்டம் இன்றேல் பணம் திரும்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, [அரசடிச் சந்தி] நல்லூர். (17867)

### ரைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி-0290)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

**வீரவேங்கை தனேந்திரன்**
**[துரைசிங்கம் ஸ்ரீகரன்]**

தாயின் மடியில்: 03 - 12 - 1975
தாயக மீட்பில்: 14 - 07 - 1991

தூய பணி செய்ய வேங்கையணி நாடி
துள்ளிக் குதித்தோடிச் சென்றவன்
தாயகம் மீட்டிடும் யாகமாம் போரிலே
தன்னுயிர் ஆகுதி செய்தவன்
அன்னவன் சின்னவன் ஆனையிறவினில்
அன்னியர் அஞ்சிடச் செய்தவன்
பொன்னென நெஞ்சிலே பூணத் தகுந்தவன்
போற்றி வணங்கிடத் தக்கவன்
உன்னை நினைக்கையில் உள்ளமுருகியே
வெள்ளமாய் கண்ணில் பாயுமே
பின்னுமுலகினில் வந்திடு வேங்கையாய்
பணி வளர்த்துனை ஆக்குவோம்.

ஆனையிறவு முகாம் தகர்ப்பு முயற்சியில் உந்தனுடன் வீரமரணமெய்திய ஏனைய மாவீரர்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

உந்தன் பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்,
உறவினர்கள், நண்பர்கள்.

கல்லறவத்தை,
மாரீசன் கூடல், இளவாலை. [4267]

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அ. தம்பிராசா**

மண்ணுலகு: 10 03 - 1924
விண்ணுலகு: 27 - 08 - 1987

எம்மில் அணையாத ஒளியாக மிளிர்ந்து நிறைந்த எம் தந்தையே! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

72/31, இராசசிங்கம் வீதி,
யாழ்ப்பாணம். [17865]

# ENGLISH CLASSES

★ சகல தரத்தினர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள்
★ பிரபல விரிவுரையாளர்களினால் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு:

**வட இலங்கை தொழில் நுட்ப கல்லூரி**
**(NORTH CEYLON TECHNICAL INSTITUTE)**
14, St. Peter's Lane,
Jaffna. [சி-0413]

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 18 — 03 — 1964
உதிர்வு: 14 — 07 — 1991

அமரர்
**குமாரலிங்கம் ரஞ்ஜகுமார்**
(விரிவுரையாளர் - அரசறிவியல், பொருளியல் துறை. யாழ். பல்கலைக்கழகம்)

உன்னை இழந்து பாசப்பிரிவின் வேதனையை உணரத் தொடங்கி, நாட்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனால், உன்னுடன் உறவாடிய நினைவுகள் எம் இதயத்தில் இன்றும்... நிலைத்துக் கொண்டே!

உன் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:
-குடும்பத்தினர்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (17900)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



வீர ஜனனம்: 26 — 08 — 1969
வீர மரணம்: 14 — 07 — 1991

**வீரவேங்கை யாதவன்**
**(கந்தையா கமலக்கண்ணன்)**

எழுச்சி கொண்டு புலியானாய் - எங்கும்
நீ வெற்றி கொண்டாய் - கட்டைக்காட்டில்
வீழ்ந்ததினால் வீரமரணமுற்றாய் - பழுதிலா
உன் வீரம் பாடலைத் தாய் - வரலாற்றில்
ஓர் இடம் நீ பிடித்தாய் - அழுதிடவே
எமை வைத்தாய் ஆறாத் துயர் தந்தாய்
தொழுகின்றோம் மாவீரா உனை எண்ணி
தமிழீழம் விடியும் நாள் நீ வருவாய்
கமலக்கண்ணா! யாதவனே!
உன் பிரிவால் ஆறாத் துயரோடு வாடுகின்றோம்.

அப்பா, அம்மா, உடன்பிறந்தோர்,
சுற்றத்தார்.

பாண்டியன்தாழ்வு,
அரியாலை.

ஆனையிறவு மான மறப்போரில் வீரமரணம் அடைந்த அனைத்து போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவர் பிரிவில் துயர் துடைத்த யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். [17958]

கோண்டாவில் மேற்கு, கந்தர்வளவு பிள்ளையார் கோவில்
பூங்காவன உற்சவத்தை முன்னிட்டு
இன்று இரவு
ஸ்ரீராம் குகன் வழங்கும்
**"ஸப்தஸ்வராவின்"**
போர்க்கால இன்னிசைத் தென்றல் நிகழ்ச்சி இடம்பெறும். [17957]

## கம்பியூட்டர் பயிற்சி

11 - 08 - 1991 இல் இருந்து வகுப்புகள் வழமை போல் நடைபெறுகின்றன.

**புதிய பிரிவுகள்**

31 - 08 - 1991 இல் BASIC, d BASE III + ஆரம்பமாகும்

விவரங்களுக்கு:

**I. D. P.** *Computer Centre,*
பிரதானவீதி, மானிப்பாய். [சி/0299]

## இலங்கை பல்கலைக்கழகங்களிற்கான வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

## கல்வியாண்டு 1991/1992

யாழ்ப்பாண, பேராதனை
பல்கலைக்கழகங்களிற்கான
**கலை முதற் தேர்வு - G. A. Q.**
**வணிக முதற் தேர்வு - 1st In Com.**

ஆகிய தேர்வுகளிற்கான பதிவுகள் 01 - 09 - 1991 முதல் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

க. பொ. த. பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

சிரேஷ்ட பதிவாளர்,
**விக்னா கல்வி நிலையம்,**
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

மு. குறிப்பு: பட்டப்படிப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த எமது நிறுவன விரிவுரையாளர்களும், College of Higher Studies, Anaipanthy விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்த சேவை. [சி-0409]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 06 — 01 — 1934
உதிர்வு: 29 — 07 — 1991

**அமரர் சவிரி வெலிச்சோர்**

அன்பின் திருவுருவாய்
பண்பின் பிறப்பிடமாய்
இருந்த நீர்
தூக்கத்தில் நித்தியமாய் போனதென்ன
கல்லறையில் உம்மை வைத்து
கண்ணீரால் மூடி விட்டோம்
விண்ணுலகம் நீர் சென்றீர்
வேண்டிடுவீர் எம்மவர்க்காய்.

31 நாட்கள் அல்ல, 31ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் உம் நினைவு எம்மை விட்டகலாது.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக யாழ். அருள் ஆச்சிரமத்தில் நாளை காலை (28-08-1991) 6-00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
அருமைத் தம்பி குடும்பத்தினர்.

381/5, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். [17954]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அவகாசம் கிடைக்கும்!

வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளில் முன்னேற்றகரமான பெறுபேறுகளைக் காட்டுவதற்கு, எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை தமக்கு அவகாசம் தருமாறு ஸ்ரீலங்கா இராணுவத் தலைமைப்பீடம் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.

கடந்த வருடம் ஜூன் மாதத்தில் அரசாங்கம் யுத்தத்தைப் பிரகடனம் செய்தபோது, ஆறு மாத காலத்தில், அதாவது 1990 டிசம்பருக்கு முன் விடுதலைப் புலிகளை ஒடுக்கி இராணுவப் பெறுபேறுகளைக் காட்ட முடியும் என்று இராணுவத் தலைமைப்பீடம் அரசாங்கத்துக்கு நம்பிக்கை ஊட்டி இருந்தது.

அமைச்சர் ரஞ்சனும் அதற்குப் பக்கத்துணையாக நின்றார். ஆனால் அவர் நினைத்தது நடக்கவில்லை,

சென்ற வருடம் டிசம்பர் இறுதியில், விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் செய்து, பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், இராணுவப் பெறுபேறுகளைக் காட்டுவதற்கு மேலும் ஆறுமாத அவகாசம் கேட்கப்பட்டிருந்தது. அதற்கு அரச தலைமைப்பீடமும் இணங்கியது.

ஆனால், இவ்வருடம் ஜூன் மாதம் வரை திட்டமிட்டவாறு இராணுவ வெற்றி எதனையும் — முன்னேற்றகரமான பெறுபேறு எதனையும் — இராணுவத் தலைமைப் பீடத்தினரால் ஈட்ட முடியவில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தில் அரசு தலைமைப்பீடம் தெளிவற்ற ஒரு சிக்கலான நிலையில் தவித்தது, இராணுவத் தீர்வை முற்றாகக் கைவிட்டு அரசியல் தீர்வுக்குப் போவோமா என்று கூடச் சிந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஆனால் இப்போது, ஆனையிறவில் தமக்கு வெற்றி கிடைத்ததாகக் காட்டிக் கொண்டு, இராணுவம் மீண்டும் அரசிடம் நான்கு மாத கால அவகாசம் கேட்கிறது. பதினைந்து மாதங்களில் காட்ட முடியாத இராணுவப் பெறுபேறுகளை, நான்கு மாதங்களில் அடைந்து விடலாம் என்று அரசுக்கு நம்பிக்கை ஊட்டுகிறது — ஆசை காட்டுகிறது.

தமிழர் பிரச்சினைக்கு முழுப் போர், போரும் பேச்சும், தனிப் பேச்சு என்ற மூன்று மார்க்கங்கள், உத்திகள் முன்வைக்கப் பட்டதுண்டு. அமைச்சரவையில் இந்த மூன்று உத்திகளையும் ஆதரிக்கும் மூன்று அணிகளும் உள்ளன.

ஜனாதிபதி பிரேமதாசா, வெளியில் மூன்றாவது தரப்பினராகக் காட்டிக்கொள்கிறார்! ஆனால் உண்மையில் — உள்ளூர —முதலாவதையா அல்லது இரண்டாவதையா ஆதரிக்கிறார் என்பது தெரியாது. அவர் அந்த இரண்டில் எதனை ஆதரிப்பவராக இருந்தாலும் இராணுவம் கேட்கும் கால அவகாசத்தை வழங்குவார் என்றே நம்பலாம்.

தெரிவுக் குழு, சர்வகட்சி மாநாடு என்பவற்றை இயங்கச் செய்து, பேச்சு மூலமான தீர்வில் நம்பிக்கையுள்ளவராகக் காட்டிக்கொண்டு, போர் மூலம் இராணுவ மேலாண்மை நிலையை எட்டிய பின் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது என்ற உத்தியையே அவர் பின்பற்றுவார் என்று நிச்சயமாக நம்பலாம்.

இந்த நிலைப்பாடு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வின்றி தொடர்ந்து இழுத்தடிப்பதாகவே இருக்கும்!

## சோவியத் ஆயுதப் படையில் பெருமளவில் களையெடுப்பு

### 80 சதவீதமானோர் பதவி இழப்பு

மாஸ்கோ ஆக. 27

சோவியத் முப்படைகளின் தலைமைப் பீடங்களைச் சேர்ந்தவர்களில் 80 சதவிதமானோர் பதவி இழக்கின்றார்கள்.

அவர்களுக்குப் பதில் இளம் தலைமுறையினர் அப்பதவிகளில் நியமிக்கப்பட்டு வருகின்றனர் என்று சோவியத் யூனியனின் புதிய பாதுகாப்பு அமைச்சர் நேற்று அறிவித்தார்.

தோல்வியில் முடிவடைந்த சதிப்புரட்சியைத் தொடர்ந்தே, ஆயுதப்படைகளில் இக்களையெடுப்பு நடத்தப்படுவதாகவும் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார். (இ-எ)

## லெனினின் தவுடலுக்கு மக்கள் இறுதி அஞ்சலி!

சோவியத் தலைநகர் மாஸ்கோவில், செஞ்சதுக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் கம்யூனிஸ்ட் புரட்சியின் தந்தை லெனினின் பூதவுடலுக்கு கடைசிமரியாதையைச் செலுத்த பல்லாயிரக்கணக்கானோர் நேற்று முண்டியடித்துக்கொண்டு சென்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சோவியத் யூனியனில் தற்போது ஏற்பட்டுவரும் புரட்சிகர மாற்றங்களின் விளைவாக லெனினின் பூதவுடல் வேறு இடத்துக்கு மாற்றம் செய்யப்படலாம் என்று பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தச் சென்றவர்கள் தெரிவித்தனர் என பி.பி.சி. அறிவித்திருக்கிறது. (இ-எ)

## கம்யூனிஸம் தோல்வி என்கிறார் ஜேம்ஸ் பேக்கர்

வாஷிங்டன், ஆக. 27

கம்யூனிஸம் தோல்வி கண்டு விட்டது. ஜனாதிபதி கோர்பச்சேவ் இப்போது தான் அதனை உணர்ந்திருக்கிறார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் ஏ. பி. சி. டெலிவிஷனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

கம்யூனிஸ சித்தாந்தம் ஒரு போதும் வெற்றி பெறாது என்பதை அமெரிக்கா கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக கூறி வந்திருக்கிறது என்பதையும் திரு. பேக்கர் அப்பேட்டியின் போது நினைவுபடுத்தினார்.

இதற்கிடையில் சோவியத் யூனியனின் உத்தியோக பூர்வ செய்தி ஸ்தாபனமான டாஸ் நிறுவனம் மற்றும் அரசு செய்தி ஏஜென்சியான நொவொஸ்தி ஆகியன பொது நிறுவனங்களாக மாற்றி அமைக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## காங்கிரஸ் தோல்விக்கு ஒற்றுமையின்மை காரணம்

### செயலாளர் அறிக்கை

சென்னை, ஆக. 27

அண்மையில் தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டசபை இடைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் தோல்வி அடைவதற்குக் காரணம் கட்சிக்குள் நிலவிய ஒற்றுமையின்மையே.

மாநில காங்கிரஸ் கட்சி செயலாளர் தண்டாயுதபாணி விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை — இடைத் தேர்தல் முடிவுகள் அ. தி. மு. க. வுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரித்திருப்பதைக் காட்டுவதாக முதலமைச்சரும் அ. தி. மு. க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். (இ-எ)

## சிவராசன் பாவித்த ஜீப் பொலீஸார் வசமாம்

பெங்களூர், ஆக. 27

ரஜீவ் காந்தி கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்தவரும் அண்மையில் பெங்களூரில் தற்கொலை செய்து கொண்டவருமான சிவராசன் பாவித்ததாகக் கருதப்படும் மாருதி ஜீப்பை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கைவிடப்பட்ட நிலையில் அந்த ஜீப் கண்டுபிடிக்கப் பட்டதாம்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் தமிழ் நாட்டில் மூன்று மாருதி ஜீப்களைப் பயன்படுத்தி வந்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

நல்லூர் உற்சவகாலச் சிறப்பகம்

## கதிர்வேலவா சரண்!

இராகம்:- வந்தனதாரிணி தாளம்:- ரூபகம்

பல்லவி

தேவனே தேவர் முதல்வனே - நல்லூர்
நாதனே நாதப் பிரம்மமே - தேவனே

அனுபல்லவி

வாடிடும் ஜீவகோடிகளெங்கும்
தேடிடும் தெய்வக் குமரனே - தேவனே

சரணம்

கீதமே தெய்வயோகமே யென்று
பாடலே புனைந்தேற்றுவார் வினை
மாளவே நலன் சேரவே செய்யுங்
காவலா கதிர் வேலவா சரண் - தேவனே

ஆ. நமசிவாயம்.

## 19 அப்பாவித் தமிழர்கள் சவளக்கடையில் படுகொலை!

அம்பாறை, ஆகஸ்ட் 27

அம்பாறை மாவட்டம் சவளக்கடையில் கடந்த 14ஆம் திகதி வயலில் வேலை செய்து கொண்டிருந்த அப்பாவித் தமிழர்கள் 19 பேர் சிங்களக் காடையர்களினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

சென்றல் காம்ப் கிராமத்திலிருந்து அன்று நண்பகல் கத்தி, வாள், பொல்லுகள் சகிதம் சவளக்கடைக்கு வந்த சுமார் 10 பேர் அடங்கிய கோஷ்டி ஒன்று விவசாயிகளைக் கடத்திச் சென்றது என்றும் —

சென்றல் காம்ப் பகுதியில் உள்ள பிள்ளையார் கோவிலடியில் வைத்து 15 விவசாயிகள் வெட்டியும், குத்தியும் கொலை செய்யப்பட்டனர் என்றும் —

மற்றைய நான்கு விவசாயிகளும் நான்காம் கொலனி சுடலையில் வைத்துக் கொலை செய்யப்பட்டு, பின்னர் அவர்களின் சடலங்கள் எரிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகளைக் கடத்திய சிங்களக் காடையர் குழுவில் பொலீஸார் ஒருவரும் இடம் பெற்றிருந்தாராம்.

உயிரிழந்த தமிழர்களில் நாவிதன் வெளியைச் சேர்ந்த சர்வோதய ஊழியரான இராசையா பாலகிருஷ்ணன் (வயது 29) என்பவரும் ஒருவராவார். (உ-3)

### கருத்தரங்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 27

இன்று காலையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டுறவுப் பகுதி பணிமனையில் நடைபெறவிருந்த ப. நோ. கூ. சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கணக்காளர்களுக்கான கருத்தரங்கு யாழ். ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### சோவியத்யூனி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்பார்க்கப்படுகின்றது.

மொல்டேவிய குடியரசு பிரிந்து சென்று ரூமேனியாவுடன் இணைந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

போல்டிக் குடியரசுகளான லித்துவேனியா, லத்வியா, எஸ்தோனியா ஆகியவை சுதந்திரப் பிரகடனம் செய்ததையடுத்து, அந்த நாடுகளை உலக நாடுகள் பல அங்கீகரித்திருக்கின்றன.

ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பும் கூண்டோடு அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது.

பிரிந்து செல்லும் குடியரசுகள் பலவற்றை ஐஸ்லாந்து, ஒஸ்ரியா, போலந்து, செக்கோஸ்லவாக்கியா, ரூமேனியா, ஜப்பான், நோர்வே, ஆர்ஜென்ரீனா, பின்லாந்து ஆகியவையும் அங்கீகரித்திருக்கின்றன.

ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பு இந்தக் குடியரசுகளுக்கு அங்கீகாரம் வழங்க முன்வந்திருப்பதால், அந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து. லக்ஸம்பேர்க், ஜேர்மனி, இத்தாலி, பிரிட்டன், அயர்லாந்து, டென்மார்க், கிறீஸ், ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகியவற்றின் அங்கீகாரம் தானாகவே இக்குடியரசுகளுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மிக விரைவில் அமெரிக்காவும் இந்தக் குடியரசுகளை அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சோவியத் யூனியனின் மிகப் பெரிய குடியரசான ரஷ்யாவும், இரண்டாவது பெரிய குடியரசான உக்ரெய்னும் தனித்தனியாகப் போவது, பிரிந்து செல்லும் குடியரசுகளையும், எஞ்சிய பின் ஒன்றாகச் சேர்ந்து நிற்கப் போகும் யூனியனின் அமைப்பையும் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதித்துவிடும் என்று அரசியல், பொருளாதார நோக்கர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். (உ-எ-த-3)

### ஆங்கில நாடகங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 27

அமெரிக்காவில் ஜேம்ஸ் தேபர், பலஸ்தீனத்தின் ஜமால் பனோரா, இந்தியாவின் அபிஜித் சேக்கார் ஆகியோர் எழுதிய மூன்று சமகால ஆங்கில நாடகங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கத்தில் மேடையேறுகின்றன. காலை 10-00 மணிக்கு ஒரு காட்சியும், மாலை 4-00 மணிக்கு இரண்டாம் காட்சியும் இடம்பெறும். (இ)

### புலோலி இளைஞர் ஜேர்மனியில் மரணம்

பருத்தித்துறை, ஆக. 27

தென் புலோலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஜேர்மனியில் கார் விபத்தில் மரணமானார்.

தென்புலோலியைச்சேர்ந்த திரு. ஆ. வே. இராமநாதன் [வயது 29] என்பவரே இறந்தவர் ஆவார். [இ-118]

### சோவியத் ஜனாதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளாதார மற்றும் இராணுவ சீர்திருத்தங்கள் தொடர்ந்தும் அமுல் செய்யப்படும் என்றும் அவர் சொன்னார்.

சதிப் புரட்சி ஏற்பட்டதற்கான பழியில் ஒருபங்கைத் தாம் ஏற்பதாகவும், அரசியல் சீர்திருத்தங்கள் குறித்துத் தாம் திடமான முடிவு எடுப்பதில் காட்டிய தாமதம் அப்புரட்சி தோன்றுவதற்குரிய காரணங்களில் ஒன்றாக அமைந்துவிட்டதாகவும் திரு. கோர்பச்சேவ் சொன்னார். (உ-எ)

### ஓமந்தை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மகன் இறந்தார் என்றும் அறியவந்தது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட விடுதலைப் புலிகள் அங்கத்தவரும், மற்றொருவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது. (அ)

### சுண்டுக்குளி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒரே குடும்பத்தை சேர்ந்த முருகேசு பரமலிங்கம் [வயது 4], பரமலிங்கம் சிவமங்களசோதி [வயது 14], பரமலிங்கம் பரிமளகாந்தி [வயது 20] மற்றும் முத்து செபமாலை மரியம் [வயது 60], பொன்னையா கதிரவேலாயுத பிள்ளை [வயது 56] ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

சம்பவம் நடந்ததன் பின்னர் பகல் ஒரு மணியளவில் ஹெலி ஒன்று அப்பகுதியில் வட்டமிட்டு பார்த்துச் சென்றது.

சுமார் ஐந்து மாத கால இடைவெளிக்குப் பின் யாழ். நகரப் பகுதியில் இடம்பெற்ற முதலாவது விமானத் தாக்குதல் சம்பவம் இதுவாகும். (இ-30-51-143-15-3]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சங்கத்தானை சனசமூக நிலையம்

## திருமண சேவை

மேற்படி சங்கத்தினரால் இலாப நோக்கற்ற முறையில் நடத்தப்படும் நானாவித சேவைகளில் ஒன்றாக திருமண சேவைப் பிரிவும் செயற்படுகிறது.

M. B. B. S. டாக்டர்கள், பொறியியலாளர்கள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் போன்றோரின் ஜாதகங்கள் [ஆண்/பெண் இருபாலாரினதும்] கைவசம் உண்டு. தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

த. சிதம்பரப்பிள்ளை,
தலைவர்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.
(17956)

ஊற்று நிறுவனம்

## பதவி வெற்றிடங்கள்

ஊற்று நிறுவனம் ஐம்பது பின்தங்கிய கிராமங்களில் தற்சார்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று வருடமாக செயல் ஆய்வுப் பரிசோதனையை நடத்துகின்றது. அதன் பெறுபேறுகளைத் தொகுத்து வறுமை ஒழிப்புத் திட்டங்கள் என்னும் வழிகாட்டி நூலை வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆய்வறிக்கைகள் எழுதக்கூடிய பின்வரும் உத்தியோகத்தர்கள் தேவை.

(1) ஆய்வாளர் [Research Officer]
பொருளியல், சமூகவியல், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்திபெற்ற பட்டதாரிகள்.
இவற்றில் இரு பாடங்கள் இருப்பினும் கவனிக்கப்படும்.

(2) மொழிபெயர்ப்பாளர் [Translator]
ஆங்கில பட்டதாரி அல்லது நல்ல ஆங்கில அறிவுடையவராதல் வேண்டும்.

குறிப்பு: மேற்கூறிய தகைமைகள் இல்லாவிடினும் திட்ட அறிக்கை, ஆய்வறிக்கை எழுதுவதில் அனுபவமுடைய ஓய்வுபெற்ற அல்லது சேவையிலுள்ள உத்தியோகத்தர்களும் பகுதிநேர அல்லது பங்கீட்டு வேலை அடிப்படையில் பணியில் சேர விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை அலுவலகத்தில் 1991-09-06 க்கு முன் சமர்ப்பிக்கவும்.

செயலாளர்,
ஊற்று நிறுவனம்.

புலோலி.
[17951]

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## பர்வதம்மா தம்பிப்பிள்ளை

குரும்பசிட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பர்வதம்மா அவர்கள் 26 - 08 - 1991 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார். இவர் காலஞ்சென்ற திரு. சீ. தம்பிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சாரதாதேவி, பங்கஜதேவி, அம்பிகைதேவி, நடராஜமூர்த்தி, சிவராமமூர்த்தி ஆகியோரின் அருமை அன்னையும், சிதம்பரநாதன், காலஞ்சென்ற சாந்தராஜா, ராமச்சந்திரன், பாலசௌந்தரி, கிரிதரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26 - 08 - 1991 திங்கட்கிழமையன்று தெல்லிப்பளையிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றன. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தயைகூர்ந்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. மகாதேவன்.

துர்க்கை அம்மன் கோவிலடி,
தெல்லிப்பளை.
[17952]

## செல்வன் சு. துஷிந்தன்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சு. துஷிந்தன் 26-8-91இல் அகால மரணமானார். இவர் கந்தசாமி சுவாமிநாதன் (பொறியியலாளர், சீமெந்துக் கூட்டுத்தாபனம்) - சரோஜாதேவி சுவாமிநாதன் (ஆசிரியை, வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மகனும், தனுஷாவின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26-8-91இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.
(17676)

தகவல் :
க. சுவாமிநாதன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 27

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் இன்று முதல் 30 ஆம் திகதி வரை மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவிருந்த ''சமூகத் தொண்டர்களுக்கான சுகாதாரப் பயிற்சி'' தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. [உ]

## மற்றொரு தனி நபர் விசாரணைக் குழு

புதுடில்லி, ஆக. 27

ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரணை நடத்த இரண்டாவது தனி நபர் ஆணைக்குழு ஒன்றை மத்திய அரசு நியமித்திருக்கிறது.

புதுடில்லி உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் திரு. எம். சி. ஜெயின் என்பவரே இத் தனி நபர் ஆணையாளர் ஆவர்.

ராஜீவ்காந்தி கொலையில் சம்பந்தப் பட்டிருப்பதாகக் கூறப்படும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சக்திகள் பற்றிய அம்சங்கள் குறித்து இக் குழு விசாரணை நடத்தும் என்று அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

## ஆரோக்கியநாதர் திருநாள்

யாழ்ப்பாணம், ஆக. 27

குருநகர் கடற்கரை வீதி புனித ஆரோக்கியநாதர் திருநாள் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. காலை 6-30 மணிக்கு திருப்பலி விருந்து ஒப்புக்கொடுத்தலும் அதனை அடுத்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும். [இ]

## உற்சவ கால் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஆக. 27

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெற்று வரும் இசை மற்றும் சமய அரங்குகளில் இன்று செவ்வாய்க்கிழமை (மாலை 5 30 மணி முதல்) இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

கம்பன் கோட்டத்தில் — சங்கீத பூஷணம் வி.கே குமாரசாமியின் வயிலினிசையும், திரு. கே. ஆர். நடராசாவின் இன்னிசையும்.

நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில்— திரு. ந. சிவசண்முகமூர்த்தி நிகழ்த்தும் கந்தரனுபூதி பற்றிய தொடர் கதாப்பிரசங்கம்.

நல்லூர் மேற்கு வீதி பிள்ளையார் கோவில் மண்டபத்தில் — கானகதா மாரிதி வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் இராமாயண தொடர் விரிவுரையில் ''குகனும் பரதனும்''

காலை 9 மணிக்கு நல்லை ஆதினத்தில்— இலவச சமய தீட்சை. [அ-126]

## சிவகுமாரனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 27

மாவீரன் சிவகுமாரனின் 42 ஆவது பிறந்த நாள் நேற்றாகும். அதனையொட்டி நேற்றுக்காலை 7-30 மணியளவில் உரும்பராயில் உள்ள அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர்கள் தேவரண்ணா, பேபிசுப்பிரமணியன், சிவகுமாரனின் தாயாரான அன்னலட்சுமி, செல்வி பாரதி ஆகியோரும் அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் கூடி நின்று மாவீரன் சிவகுமாரனுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தினர். (அ)

# வலி. வடக்கில் நாளை முதல் நிவாரண கார்ட் பெறலாம்

யாழ்ப்பாணம், ஆக. 27

வலிகாமம் வடக்கு உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்தோருக்கான புதிய உலர் உணவு அட்டைகள் நாளை (புதன்கிழமை) முதல் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவிருக்கின்றன.

பன்னாலை, மாவிட்டபுரம், பளை, வீமன்காமம் வடக்கு, தையிட்டி வடக்கு தந்தை செல்வாபுரம், மாவை தெற்கு, குரும்பசிட்டி தெற்கு பலாலி தெற்கு ஆகிய கிராமசேவையாளர் பகுதிகளுக்கு நாளையும் —

இளவாலை வடக்கு. கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை கிழக்கு, வறுத்தலைவிளான், இளவாலை வடமேற்கு, நகுலேஸ்வரம், துர்க்காபுரம், வயாவிளான் கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு 29 ஆம் திகதியும் —

வித்தகபுரம், காங்கேசன் மத்தி, வயாவிளான் மேற்கு, மயிலிட்டித்துறை தெற்கு, தெல்லிப்பளை, காங்கேசன் தெற்கு, மயிலிட்டி வடக்கு, பலாலி கிழக்கு பகுதிகளுக்கு 30 ஆம் திகதியும் —

காங்கேசன் மேற்கு, கட்டுவன், தென். மயிலை, தையிட்டி கிழக்கு, பளை வீமன்காமம் தெற்கு, கட்டுவன்மேற்கு. குரும்பசிட்டி, மயிலிட்டித்துறை வடக்கு ஆகிய பகுதிகளுக்கு 31 ஆம் திகதியும் —

தையிட்டி தெற்கு, பலாலி வட-மேற்கு, பலாலி வடக்கு, பலாலி மேற்கு பகுதிகளுக்கும், வெளி மாவட்டத்தினருக்கும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் அட்டைகள் வழங்கப்படவிருக்கின்றன. (உ-3)

## கிட்டு பிஜித் தீவிலாம்

கொழும்பு, ஆக. 27

லண்டனில் இருந்து கிட்டு பிஜித் தீவுகளுக்குச் சென்றுள்ளார் என்று கொழும்பு சிங்கள நாளிதழான 'தினமின' செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

## திரும்பவில்லை

பருத்தித்துறை, ஆக. 27

பருத்தித்துறை கடற்பிரதேசத்தில் கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் பத்து நாட்களாக வீடு திரும்பவில்லை.

மரியதாஸ் பத்திமா தேவராஜா (வயது 39) என்பவரே காணாமல் போனவர் ஆவார்.

கடந்த 11ஆம் திகதி மாலை 3-00 மணியளவில் சிறிய கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்ற இவர் இதுவரை வீடு திரும்பவில்லையாம். (இ-118)

## இடமாற்றம்

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடுப் பகுதிகளில் இராணுவம் முகாமிட்டுள்ளதால் உடுத்துறைக் கொத்தணியைச் சேர்ந்த சகல ஆசிரியர்களுக்கும் தற்காலிக இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இப்பகுதிப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் நாகர் கோவில், உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஆகிய கொத்தணிகளிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என வடமராட்சிக் கல்விக்கோட்ட உயரதிகாரி தெரிவித்தார். (இ-118)


யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

சாந்தி சினிமா முன்பாக (மேல் மாடியில்)

G. C. E O/L, A/L
Short-Hand Typing
Spoken English
G.A.Q.I. A.B.

புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 28 - 08 - 1991
[17953]


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வன் ஆ. எட்வேட் குணசூரியன்

(வீரவேங்கை நரேஷ்)

பிறப்பு: 05 - 02 - 1972

இறப்பு: 28 - 07 - 1991

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள், கிறீஸ்துராசா சனசமூகநிலையத்தினர்.

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.
(17955)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org